விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 31 திங்கள் 14.06.2021 மலர் - 2, இதழ் - 69

# சேவாபாரதி கோவிட் கேர் சென்டர்

சேவாபாரதி மற்றும் ஹார்ட்புல்னெஸ் சார்பாக, திருப்பூர், பல்லவராயன் பாளையத்தில் இலவச 'கோவிட் கேர் சென்டர்' துவக்கப்பட்டுள்ளது. இங்கு இயற்கையான சூழலில், 24 மணி நேரமும் மருத்துவர்கள், செவிலியர்கள் கண்காணிப்புடன் 200 படுக்கை வசதிகள், ஆக்சிஜன் செறிவூட்டும் கருவிகள், சத்தான உணவு, மூச்சுப் பயிற்சி, மனநல பயிற்சிகள் உள்ளிட்ட சிறந்த சிகிச்சை முறைகள் அனைத்தும் எந்தவித கட்டணங்களுமின்றி முற்றிலும் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தகவல் உதவி & தொடர்புக்கு: 9342483050.




# ஸ்தாபகருக்கு மரியாதை

மகாராஷ்டிரா சென்ற அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வாஸ் சர்மா, அங்கு நாக்பூரில் உள்ள ஆர்.எஸ். எஸ். ஸ்தாபகர் டாக்டர் ஹெட்கேவார் மற்றும் குருஜி நினைவிடங்களில் அஞ்சலி செலுத்திநார். அவருடன் கர்பி ஆங்லாங் தன்னாட்சிக் குழு செயற்குழு உறுப்பினர் துலிராம் ரோங்காங் உடன் இருந்தார்.



# தாமதமாகும் விமான டெலிவரி

கொரானா காரணமாக, ஹால் நிறுவனத்திற்கு தேவையான மெட்டீரியல்கள் தாமதமாக கிடைப்பதால் விமான தயாரிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தேஜாஸ் விமான தயாரிப்பில் இதனால் கடந்த மூன்று மாதங்களாக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஹிந்துஸ்தான் ஏரோநேட்டிக்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் மாதவன் அவர்கள் கூறியுள்ளார். தற்போது அனைத்தும் சராசரி நிலைமைக்கு வருகிறதால் விமான தயாரிப்பு விரைவில் துவங்கும். மூன்றாம் அலை ஏற்படாமல் இருக்கும் பட்சத்தில் ஜீலை முதல் விமான டெலிவரி தொடங்கும் என அவர் கூறியுள்ளார்.



# லட்சத்தீவில் உருவாகும் காஷ்மீர்



லட்சத்தீவு பகுதிகளில் பெருகும் முஸ்லிம் பயங்கரவாதம், ஆயுதக் கடத்தல், போதை மருந்துக் கடத்தல் உள்ளிட்டவற்றை தடுக்கவும், தேச பாதுகாப்பில் அதன் ராணுவ முக்கியத்துவத்தை உறுதிபடுத்தவும் அதன் நிர்வாகி பிரபுல் படேல், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இதனால் அங்குள்ள சில முஸ்லிம் அமைப்புகள் பத்வாவை வெளியிட்டுள்ளனர். அதன் அடிப்படையில், அங்குள்ள உள்ளூர் முஸ்லிம் கடைக்காரர்கள், ‘பா.ஜ.கவை சேர்ந்தவர்களுக்கு எந்த பொருளும் விற்பதில்லை’ என்ற அறிவிப்பை தங்கள் கடைகளில் வைத்துள்ளனர். அங்கு 93 சதவீதம் முஸ்லிம்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

லட்சத்தீவின் தற்போதைய நிலை 1990களின் காஷ்மீரின் நிலையுடன் ஒத்துள்ளது. காஷ்மீரில் முஸ்லிம்கள் எப்படி ஹிந்துக்களை கொன்றும் கொடுமை செய்தும் விரட்டியடித்தனரோ அதே போலவே லட்சத்தீவு நிலையும் உள்ளது என ஹிந்து அமைப்புகள் தெரிவிக்கின்றன. லட்சத்தீவு ஆட்சியர் அஸ்கர் அலி, நிர்வாகி பிரபுல் படேல், லட்சத்தீவு பா.ஜ.க தலைவர் அப்துல் காதர் ஹாஜி ஆகியோருக்கு எதிரான மரண அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து புலனாய்வு அமைப்புகள் நிலைமையை கண்காணித்து வருகின்றன.

# பேச்சுவார்த்தை மீண்டும் துவக்கம்



மேற்கு வங்கம் மற்றும் அசாம் தேர்தல்கள் முடிந்துவிட்டன. கொரோனாவும் மெல்ல தணிந்து வருகிறது. இந்த நிலையில், நமது மத்திய அரசு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நாகா சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் துவக்கவும் விரைந்து பேசி முடிக்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி, நாகாலாந்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் சிறப்புக்குழு வரும் ஜூன் 19 அல்லது 20 தேதிகளில் நேரடியாக அல்லது இணையம் வழியாக நாகா பிரச்சினை மற்றும் சமாதான முன்னெடுப்புகள் குறித்து பேச உள்ளனர். இக்குழுவின் தலைவராக முதலமைச்சர் நீபியு ரியோ செயல்படுவார். இக்குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் என்.பி.எஃப் தலைவர் டி ஆர் ஜெலியாங், துணை முதல்வர் மற்றும் பா.ஜ.க தலைவர் ஒய் பாட்டன் மற்றும் அனைத்து முக்கிய அரசியல் கட்சி உறுப்பினர்கள், ஒரு சுயாதீன உறுப்பினர் இடம் பெறுவர். வரும் 2022ல் நடைபெற உள்ள மணிப்பூர் தேர்தலுக்குள் இந்த பேச்சுவார்த்தையை சுமூகமாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து உள்துறை அமைச்சகமும், பிரதமர் அலுவலகமும் மணிப்பூர் அரசுடன் தொடர்பில் உள்ளது.

# ஸ்வீடன் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அழைப்பு

இந்தியா ஸ்வீடன் பாதுகாப்பு தொழிற்துறை கூட்டமைப்பின் கருத்தரங்கில் கலந்து கொண்டு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசினார் அப்போது இந்திய தயாரிப்புகள் உலகளாவிய தரத்தை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகம், உத்தர பிரதேச மாநிலங்களில் அமையவிருக்கும் பாதுகாப்பு முனையங்களில் ஸ்வீடன் பாதுகாப்பு நிறுவனங்கள் முதலீடு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், பாதுகாப்பு துறையில் தனிப்பட்ட முறையில் 75 சதவீகிதமும் அரசு வழியாக 100 சதவிகிதமும் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறினார். இந்த கருத்தரங்கின் முடிவில் இந்திய பாதுகாப்பு தயாரிப்பாளர்கள் சம்மேளனம் மற்றும் சுவீடன் பாதுகாப்பு மற்றும் ராணுவ தொழில்துறை கூட்டமைப்பு இடையே, இருதரப்பு பாதுகாப்பு தயாரிப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் ஓர் ஒருங்கிணைந்த குழுவை அமைத்து எதிர்கால திட்டங்களை அடையாளம் காண ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிலையில், தற்போது இந்தியா தனது விமானப்படையில் உள்ள பழைய விமானங்களுக்கு மாற்றாக புதிய 114 விமானங்களை வாங்க முயற்சித்து வருகிறது. இதற்கு ஸ்வீடனின் சாப் நிறுவனம் தனது கிரிப்பன் இ விமானத்தை 100% தொழில்நுட்ப பரிமாற்றத்துடன் வழங்க முன்வந்துள்ளது. கிரிப்பன் தவிர்த்து பிரான்சின் ரபேல், ரஷ்யாவின் மிக்35 மற்றும் சுகாய்35 மற்றும் யுரோபைட்டர் டைபூன் ஆகிய விமானங்களும் போட்டியில் உள்ளன.



# மதமாற்ற ஜிகாத்



மகாராஷ்டிராவின் மாலேகானில் வசிக்கும் 23 வயதான மஜீத் கான், 15 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து, திருமணத்திற்காக மதம் மாற்ற முயன்றார். சிறுமி மதம் மாற மறுத்த காரணத்தால், கான் தனது மற்ற மூன்று நண்பர்களை அழைத்து வந்து அந்த சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்யத் தூண்டியுள்ளார். சிறுமியின் உடல் நிலை மோசமானதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதுதான் இந்த விஷயம் பற்றி குடும்பத்தினருக்குத் தெரிய வந்தது. தற்போது, அந்த நான்கு பேர் மீதும் போக்ஸோ சட்டம், இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் மத சுதந்திரச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மஜீத் கான் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மற்ற மூவரையும் கைது செய்ய நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.


# நாடு திரும்ப அனுமதி மறுப்பு

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பில் சேர்ந்த சேர்ந்த கேரளாவைச் சேர்ந்த நான்கு பெண்கள் மீண்டும் பாரதம் திரும்பி வர அனுமதிப்பது சாத்தியமில்லை என தூதரக உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. ஆப்கானிஸ்தானில் வெவ்வேறு தாக்குதல்களில் பயங்கரவாதிகளான அவர்களின் கணவர்கள் கொல்லப்பட்டனர். 2019 நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் முன் சரணடைந்த ஆயிரக்கணக்கான ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளில் கேரளாவைச் சேர்ந்த சோனியா செபாஸ்டியன் எனும் ஆயிஷா, மெர்ரின் ஜேக்கப் எனும் மரியம், நிமிஷா எனும் பாத்திமா ஈசா மற்றும் ரஃபீலா இந்த முஸ்லிம் பெண்களும் அடங்குவர்.

ஆப்கானிஸ்தானின் தேசிய பாதுகாப்பு இயக்குநரகத்தின் தலைவரான அஹ்மத் ஜியா சரஜ், 13 நாடுகளைச் சேர்ந்த 408 ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் ஆப்கானிஸ்தான் சிறைகளில் உள்ளனர்.. இதில் 4 இந்தியர்கள், 16 சீனர்கள், 299 பாகிஸ்தானியர்கள், 2 பங்களாதேஷியர்கள், 2 மாலத்தீவினர் அடங்குவர். கைதிகளை நாடு கடத்த ஆப்கானிஸ்தான் அரசு பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது என்றார். முஸ்லிம் பயங்கரவாதத்தில் இந்த கேரள பெண்களுக்கு வலுவான நம்பிக்கை இருக்கிறது. அவர்களை அனுமதிப்பது சாத்தியமில்லை என புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.




# சீன தடுப்பூசி தைவானுக்கு அழைப்பு



உலகின் மற்ற உலக நாடுகளை போலவே, தைவானும் கொரோனா நோய்தொற்றுக்கு எதிராக கடுமையாக போராடி வருகிறது. தைவானின் 23.5 மில்லியன் மக்களில் 3% மட்டுமே குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகளை தயாரிக்கும் நாடுகள், பிற நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்கி உதவி செய்து வருகின்றன. அவ்வகையில் சீனாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசியை போட்டுக்கொள்ள தைவான் நாட்டு மக்களுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது. ஆனால், தைவான், சீன தடுப்பூசிகளின் பாதுகாப்பு குறித்து கவலை தெரிவித்துள்ளதோடு அவற்றைப் பயன்படுத்தவும் அனுமதிக்கவில்லை. அந்த நாட்டு மக்களும் சீன தடுப்பூசிகளை போட ஆர்வம் காட்டவில்லை. சீனாவின் திட்டங்கள் ஒரு சிலருக்கு வேண்டுமானால் கவர்ச்சிகரமானதாக இருக்கலாம், ஆனால் பலரால் செலவுகளைச் சமாளிக்க முடியாது என்பது பிரச்சினை என்று ஒரு தைவான் அதிகாரி கூறியுள்ளார். கடந்த மாதம் தைபேயின் தேசிய செங்கி பல்கலைக்கழகத்தின் கருத்துக் கணிப்பில், பெரும்பாலான மக்கள் சீன தடுப்பூசிகளை போட்டுக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆன்லைனில் பகவத் கீதை வகுப்பு





இஸ்கான் என அழைக்கப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சார்பில் பல்வேறு ஆன்மிகம் சார்ந்த பயிற்சிகள் மாணவ மாணவியர், இளைஞர்கள், பெரியவர்கள் என அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இலவசமாக போதிக்கப்படுகிறது. ஆன்லைனில் பகவத் கீதை வகுப்பு வரும் 18ம் தேதி முதல் தினமும் இரவு 7:00 முதல், 8:00 மணி வரை ஆங்கிலம், தமிழில் இலவசமாக போதிக்கப்பட உள்ளது. நடக்கிறது. இதில் பங்கேற்க விரும்பமுள்ளவர்கள், www.studygita.com/register என்ற இணையதள முகவரியிலும், 9840229226 என்ற வாட்ஸ் அப் எண் வாயிலாகவும் பதிவு செய்யலாம்.

# ஜி - 7 மாநாட்டில் பிரதமர் மோடி உரை



பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான 'ஜி 7' மாநாட்டில் இந்தியா, ஆஸ்திரேலியா, தென் கொரியா, தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகள் விருந்தினர்களாகப் பங்கேற்றன. பிரதமர் நரேந்திர மோடி, வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக, இம்மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார். அப்போது, இந்தியாவில் கோவிட் 2வது அலை ஏற்பட்டபோது உதவிய ஜி7 நாடுகளுக்கு நன்றி தெரிவித்த அவர், 'இந்தியா போன்ற நாடுகளில் தடுப்பூசிக்கான மூலப்பொருட்கள் வினியோக சங்கிலி, எந்தவிதத் தடையுமின்றி தொடர வேண்டும். உலகளாவிய சுகாதார கட்டமைப்பை மேம்படுத்த அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். 'ஒரே பூமி; ஒரே ஆரோக்கியம்' என்ற திட்ட அணுகுமுறையுடன் உலக நாடுகள் ஒன்றிணைந்து கூட்டாக செயல்பட்டு, உலக சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும். இந்தியாவில், கொரோனாவிற்கு எதிராக அரசு, தொழில்துறை, ராணுவம், பொது மக்கள் என ஒட்டு மொத்த சமூகமும் போராடி கொண்டுள்ளது. இது போன்ற பெருந்தொற்றுகள் வருங்காலத்தில் ஏற்படுவதை தடுக்க உலகளாவிய ஒற்றுமை தேவை. கொரோனா தடுப்பு மருந்திற்கான காப்புரிமையை தற்காலிகமாக விலக்கிக்கொள்ள வேண்டும்' என பேசினார். அவரது கருத்துக்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் வரவேற்பைத் தெரிவித்தன.

# தேநீர் கடைகள் திறக்க அனுமதி



டாஸ்மாக்கை திறக்கும் தமிழக அரசு, தேநீர் கடைகளையும் கோயில்களையும் திறக்க தடையை தொடர்ந்ததை அடுத்து தமிழகம் முழுவதும் அதற்கு பலத்த கண்டனங்களும் விமர்சனங்களும் எழுந்தன. இதனால், இன்று முதல் தேநீர் கடைகளை காலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணிவரை திறக்க அனுமதித்துள்ளது. அங்கு நின்று தேநீர் குடிக்க அனுமதியில்லை, பார்சல் சேவைக்கு மட்டுமே அனுமதி என தெரிவித்துள்ளது.

# தமிழக பா.ஜ.க. ஆர்ப்பாட்டம்



தமிழகத்தில் கொரோனா இரண்டாம் அலை பரவலை கட்டுப்படுத்த தமிழக அரசு கடந்த 2 வாரமாக முழு ஊடரங்கை அமல்படுத்தியது. இன்று முதல் பல்வேறு தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அதனையொட்டி, கொரோனா தொற்று குறைவாக காணப்படும் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் டாஸ்மாக் கடைகளை திறக்க அரசு அனுமதி வழங்கியது. இதற்கு பா.ஜ.க, பா.ம.க உள்ளிட்ட பல்வேறு கட்சியினரும் பொதுமக்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்னர். இந்நிலையில், டாஸ்மாக் கடைகளை திறக்கும் தமிழக அரசின் முடிவைக் கண்டித்து பா.ஜ.க சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்று அக்கட்சி அறிவித்தது. அதன்படி, டாஸ்மாக் கடைகளை திறக்க எதிர்ப்பு தெரிவித்து அக்கட்சித் தலைவர் எல். முருகன், பா.ஜ.க எம்.எல்.ஏ எம்.ஆர். காந்தி, நடிகையும், பாஜக நிர்வாகியுமான குஷ்பு, உள்ளிட்டோர் பதாகைகள் ஏந்தி போராட்டம் நடத்தினர்.

# சிறார்களுக்கு பாதிப்பு இருக்காது



கொரோனா மூன்றாவது அலை வீசலாம், அதில் குழந்தைகளுக்கு பாதிப்பு வரலாம் என எதிர்பார்க்கப்பட்டு வரும் சூழலில், பாரதத்தில், 3ம் அலையால் 10 வயதிற்குக் குறைவான சிறார்கள் பாதிக்கப்பட்டாலும், சர்வதேச அளாவுடன் ஒப்பிடுகையில் அது சமமாகவே இருக்கும். அதிகமாக அறிகுறிகள் இருக்காது. அப்படியே இருந்தாலும் மிதமாகவே இருக்கும், காய்ச்சல், சுவாச கோளாறு, வயிற்றுக் கோளாறு போன்ற அறிகுறிகள் காணப்படும் என பிரபல மருத்துவ இதழான லான்செட் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

# குற்றவாளிக்கு உதவும் அமைச்சர்





லட்சத்தீவு தீவுகளின் மக்களுக்கு எதிராகமோடிஅரசாங்கம்கொரோனாவை உயிரி ஆயுதமாக பயன்படுத்தியதாகக் கூறிய சர்ச்சைக்குரிய கேரள நடிகையும் மாடலுமான ஆயிஷா சுல்தானா மீது பா.ஜ.கவின் லட்சத்தீப் பிரிவு தலைவர் சி அப்துல் காதர் ஹாஜியின் புகாரின் பேரில் லட்சத்தீவு காவல்துறையால், ஐ.பி.சி பிரிவுகள் 124 ஏ (தேசத்துரோகம்) மற்றும் 153 பி (வெறுப்புப் பேச்சு) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் எந்த நேரத்திலும் கைதாகலாம் எனும் சூழலில், கேரள அமைச்சர் சிவன்குட்டி அவருக்கு ஆதரவாக பேசியுள்ளார். ஆயிஷா கவலைப்பட வேண்டாம், பினராயி விஜயன் தலைமையிலான கம்யூனிச அரசு ஆயிஷாவுக்கு துணையாக இருக்கும் என தெரிவித்துள்ளார். மேலும், "லட்சத்தீவில் நடைபெறும் சீர்திருத்தங்களுக்கு எதிராக நாங்கள் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். அமைச்சரின் இந்த செயல் கேரள அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

# விலை குறையும் மின்சார வாகனம்



பெட்ரோல் விலை உயர்ந்து வரும் நிலையில், மின்சார வாகனத் தயாரிப்புகளையும் பயன்பாட்டையும் ஊக்குவிக்கும் விதமாக பேருந்துகளைத் தவிர மற்ற அனைத்து வாகனங்களுக்கும் ஒரு கிலோவாட் (kWh) அலகுக்கு முன்பு மானியமாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அதனை தற்போது, 15 ஆயிரமாக உயர்த்தி வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. இதனால், மின்சார வாகனங்களில் விலை ரூ. 7 ஆயிரத்தில் இருந்து 15 ஆயிரம்வரை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# திருநாவுக்கரசர் புது விளக்கம்



திருச்சி காங்கிரஸ் எம்.பி திருநாவுக்கரசர், மணப்பாறை அரசு மருத்துவமனையில் நேரில் ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், "தமிழகத்தில் டாஸ்மாக் கடைகள் திறக்கப்பட்டுள்ளது என்றால் அங்கு மதுபாட்டிலை வாங்கிக் கொண்டு உடனே சென்று விடுவார்கள், கூட்டம் கூடுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் டீக்கடையில் டீயை வாங்கிக் கொண்டு மணிக்கணக்கில் அமர்ந்திருப்பார்கள். இதனால் கூட்டம் கூட வாய்ப்பிருக்கின்றது என்பதால்தான் திறக்கப்படவில்லை. அதுவும் இன்னும் ஒரு வாரத்திற்கு மட்டும்தான்" என புதிதாக விளக்கம் ஒன்றை கொடுத்துள்ளார். மது நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும், அதனால் கொரோனா தொற்று மேலும் பரவும். டாஸ்மாக்கில் சமூக இடைவெளி தொடர்ந்து முறையாக பின்பற்றப்படுவது சந்தேகமே. மதுவால் சட்டம் ஒழுங்கும் சீர்குலையும் என்பது அவருக்குத் தெரியாதா அல்லது தி.மு.க தலைவர்களான ஸ்டாலினும், கனிமொழியும், காங்கிரஸ் தலைவர்களும்கூட கடந்த கொரோனா முதல் அலையின்போது, டாஸ்மாக்கை மூட சொல்லி, போராட்டங்கள் நடத்தியபோது, இந்த யோசனை அவருக்குத் தோன்றவில்லையா என நெட்டிசன்கள் கேட்கின்றனர்.

# நியூயார்க் டைம்சுக்கு மத்திய அரசு கண்டனம்




அமெரிக்க நாளிதழான நியூயார்க் டைம்சில், 'பாரதத்தில் கொரோனாவுக்கு இதுவரை மூன்று லட்சம் பேர் பலியாகியுள்ளதாக, அந்நாட்டு அரசு தெரிவிக்கிறது. ஆனால், உண்மையில், 42 லட்சம் பேர் வரை பலியாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பலி எண்ணிக்கையை, மத்திய அரசு மூடி மறைக்கிறது' என, செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இந்த செய்திக்கு மறுப்பு தெரிவித்துள்ளதுடன், தவறான தகவல் வெளியிட்டதற்காக நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு கண்டனம் தெரிவித்து மத்திய சுகாதார துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், 'இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் வழிகாட்டுதல்களின்படி, கொரோனாவால் இறந்தவர்களை மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் முறையாக பதிவு செய்து வருகின்றன. மாவட்ட வாரியாக பலி எண்ணிக்கை தினமும் பதிவு செய்யப்பட்டு வருகிறது. ஆனால், பாரதத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கில், இப்படி கற்பனையான அறிக்கையை நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இதற்கு பாரத அரசு சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது' என கூறியுள்ளார்.

# கோவின் தகவல்கள் பாதுகாப்பாக உள்ளன

கோவிட் தடுப்பூசி போடும் பணிகளை, ஒருங்கிணைத்து வரும் 'கோவின்' இணையதளத்தில் மக்கள் தங்களின் ஆதார் எண்ணைக் கொண்டு முன்பதிவு செய்து, குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம். இந்த தளத்தை சில மர்ம நபர்கள் முடக்கி அதில் பதிவு செய்யப்பட்டிருந்தவர்களின் தகவல்கள் கசிந்து விட்டதாக செய்திகள் வெளியாகின. இதற்கு மத்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. இந்த தகவல்கள் அடிப்படை ஆதாரமற்றவை. எந்த தகவல்களும் கசியவில்லை. மக்களின் தகவல்கள் அனைத்தும் பாதுகாப்பாக இருக்கின்றன. இது குறித்து மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் விசாரித்து வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் சேனாவாக உருமாறும் சிவசேனா

சிவசேனா தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் ஷெவாலே, மும்பை மேயர் கிஷோரி பெட்னேகருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில், முஸ்லிம் கொடுங்கோல் மன்னர்களை எதிர்த்து வீரமாக பல போர்கள் புரிந்த மாவீரன் பிருதிவிராஜ் சௌஹானை, கைது செய்ததாகக் கூறிக்கொள்ளும் குவாஜா மொய்னுதீன் சிஷ்டியின் பெயரை, கட்கோபர்மன்கூர்ட் இணைப்புசாலையில் ஒரு பாலத்திற்கு சூட்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். சிவசேனா எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதன் அடிப்படை கொள்கைகளை மறந்து, அப்பகுதியில் உள்ள 70 சதவீத முஸ்லிம் வாக்காளர்களை கவர்வதற்காக இப்படி கடிதம் எழுதியுள்ளார் அவர். யார் இந்த குவாஜா மொய்னுதீன் சிஷ்டி? சுல்தான் இலுட்மிஷின் ஆட்சி காலத்தில், பாரதத்திற்கு வந்த முதல் சூஃபி ஞானிகளில் ஒருவர் என சொல்லப்படும் இவர், உண்மையில், ஒரு ஹிந்து வெறுப்பாளர். சூஃபிகள் முஸ்லிம் படையில் ஒரு பகுதியாகவே அப்போது வந்திருந்தனர். ஹிந்து மன்னர்களுக்கு எதிரான ஜிஹாதி போர்களில் பங்கேற்றனர். ஹிந்து ராஜ்யங்களையும் செல்வத்தையும் கைப்பற்றுவதையும், மக்களை அடிமைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே இவர்கள் செயல்பட்டனர். காஷ்மீரில், ஹிந்து கோயில்களை அழிப்பதற்கும் அங்கு ஹிந்துக்களை படுகொலை செய்வதற்கும், கட்டாய மதமாற்றம் செய்வதற்கும் ஊக்கமளித்தவர்கள் சூஃபிகள்தான். என 'இஸ்லாமிய ஜிஹாத், கட்டாய மாற்றங்கள், ஏகாதிபத்தியம், அடிமைத்தனத்தின் மரபு' என்ற நூலில் அழ்தன் ஆசிரியர் எம்.ஏ கான் குறிப்பிட்டுள்ளார்.



# விவசாயிக்கு உதவிய பாரத ராணுவம்



ஜார்க்கண்ட் மாநிலம் ராம்கர் நகர் அருகில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த விவசாயி ரஞ்சன் குமார் மஹதோ, தனது 25 ஏக்கர் தோட்டத்தில் விளைந்த சுமார் 5,000 கிலோ அளவிலான தர்பூசணியை கொரோனா தொற்று காரணமாக விற்க முடியாமல் அவதிப்பட்டார். அதனை வீணடிக்க விருப்பமின்றி ராணுவத்தினருக்கு இலவசமாக வழங்க முன்வந்தார், இதனை அறிந்து கொண்ட அங்குள்ள சீக் ரெஜிமென்ட்டின் ராணுவ அதிகாரிகள் அந்த மையத்தின் கட்டளை அதிகாரி ப்ரிகேடியர் எம். ஶ்ரீகுமார் தலைமையில் அந்த விவசாயியின் வீட்டுக்கு சென்று, 5,000 கிலோ தர்பூசணியை சந்தை விலைக்கே மொத்தமாக ராணுவத்திற்காக கொள்முதல் செய்ததுடன் அவரது குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், உணவு பண்டங்களை கொடுத்து விட்டு வந்தனர். இதனை சற்றும் எதிர்பாராத விவசாயி ரஞ்சன் குமார் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இதுகுறித்து பேசிய ப்ரிகேடியர் ஶ்ரீகுமார், 'தற்போது விவசாயி ரஞ்சன் குமாரிடம் 40 பேர் பணியாற்றி வருகின்றனர், இது அவர்களின் வாழ்வாதாரமும்கூட அதனால் எங்களால் முடிந்ததை செய்தோம்' என கூறினார்.

# ராஜஸ்தான் காங்கிரசில் குழப்பம்



ராஜஸ்தானில் அசோக் கெலாட் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. இம்மாநில துணை முதல்வராக இருந்தச் சச்சின் பைலட்டுக்கும், முதல்வர் அசோக் கெலாட்டுக்கும் இடையே பல ஆண்டுகளாக பனிப்போர் நிலவி வருகிறது. தனது ஆதரவு எம்.எல். ஏக்கள், 19 பேருடன், கட்சித் தலைமைக்கு எதிராக, சச்சின் பைலட் கடந்த ஆண்டு போர்க்கொடி தூக்கினார். இதனை சரிசெய்ய, அகமது படேல் தலைமையில் மூன்று நபர் கமிட்டியை சோனியா அமைத்தார். அவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், சச்சின் பைலட் ஆதரவாளர்களுக்கு அமைச்சரவை, வாரிய பதவிகள் வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. ஆனால், ஓராண்டு ஆகியும், உறுதி அளித்த பதவிகள் வழங்கப்படாதது, சச்சின் பைலட் ஆதரவாளர்களை வெறுப்பில் ஆழ்த்தியுள்ளது. மேலும், பைலட்டை கைகழுவ அவரது ஆதரவாளர்களை முதல்வர் அசோக் கெலாட் தரப்பு வற்புறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. இதனால், சமரசக் குழுவில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் அஜய் மக்கான் 'காலியாக உள்ள அமைச்சர் பதவிகள், வாரியம், கமிஷன் பதவிகள் விரைவில் நிரப்பப்படும். இது குறித்து பேசி வருகிறோம். சச்சின் பைலட் உடன் தொடர்பில் இருந்து வருகிறேன்' என அவசர அவசரமாக செய்தி வெளியிட்டுள்ளார். ஆனால், இது குறித்து சச்சின் பைலட் கருத்துக் கூற மறுத்துவிட்டார்.

# ஜான்சன் & ஜான்சனுக்கு பின்னடைவு

அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு (எப்.டி.ஏ) ஜான்சன் & ஜான்சனின் அமெரிக்காவில் உள்ள பால்டிமோர் ஆலையில் தயாரிக்கப்பட்ட 60 மில்லியன் டோஸ் கொரோனா வைரஸ் தடுப்பூசியை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டது. இதனுடன் சேர்த்து ஜான்சன் & ஜான்சனின் நிராகரிக்கப்பட்ட மொத்த கொரோனா தடுப்பு மருந்துகள் அளவுகளின் எண்ணிக்கை 75 மில்லியனாக உயர்ந்தது. இம்மருந்தை உற்பத்தி செய்த எமர்ஜென்ட் பயோ சொல்யூஷன்ஸின் பால்டிமோர் ஆலையில் மருந்துகளில் மாசு ஏற்படுத்தக்கூடிய ஆதாரங்களை அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் கண்டறிந்தனர். அதனால், அங்கு விசாரணை நடைபெற்று வருகிறது. ஆலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இந்த ஆலையில் தயாரிக்கப்பட்ட ஜான்சன் & ஜான்சன் மற்றும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளின் 100 மில்லியனுக்கும் அதிகமான மருந்துகளின் தலைவிதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அமெரிக்காவில் பயன்படுத்தப்பட்ட ஜான்சன் & ஜான்சன் கொரோனா வைரஸ் தடுப்பூசியின் 21 மில்லியன் டோஸ் நெதர்லாந்தில் தயாரிக்கப்பட்டது. ஜான்சன் & ஜான்சனின் கொரோனா தடுப்பூசி போடுவதால் ஏற்படும் இரத்த உறைவு கோளாறுக்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாகவும் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. முன்னதாக, இரண்டு டோஸ்கள் தேவைப்படும் மற்ற தடுப்பூசிகளுடன் ஒப்பிடும்போது ஜான்சன் & ஜான்சன் தடுப்பூசி ஒற்றை டோட் தடுப்பூசி நம்பிக்கைக்குரியதாக கருதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.







# ஸ்ரீ சைதன்யர்

"ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு" என்னும் பெயரை பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் யார் என்பதை முறையாக அறியாமல் இருக்கலாம். அதனை ஸ்ரீல பிரபுபாதர், ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் என்னும் தனது நூலின் அறிமுகத்தில் மிக எளிதாக விளக்கியுள்ளார். அதில்...,

பகவான் சைதன்ய மஹாபிரபுவை நம்மில் ஒருவராக நினைத்துவிடக் கூடாது. அவர் சாக்ஷாத் கிருஷ்ணரே என்பதால், அவர் ஒருபோதும் மாயை என்னும் மேகத்தினுள் வருவதில்லை. பகவான் சைதன்யர் கிருஷ்ணரின் மீதான அன்பினை கிருஷ்ண பக்தியைப் பரப்புவதற்காகவே பூமிக்கு வந்தார்.

ஒரு மாணவன் சரியாக எழுதவில்லை என்பதைக் கண்டு அவனது கையைப் பிடித்து, 'அ, ஆ, இ...' எப்படி எழுத வேண்டும் என்று ஒரு ஆசிரியர் கற்றுக் கொடுக்கிறார். அதற்காக, ஆசிரியர் 'அ, ஆ, இ...' கற்றுக்கொள்கிறார் என்று எவரும் முட்டாள்தனமாக நினைக்கக் கூடாது. அதுபோலவே, பகவான் சைதன்யர் பக்தரின் வடிவில் தோன்றியபோதிலும், அவரை ஒரு சாதாரண மனிதராக நாம் முட்டாள்தனமாக நினைக்கக் கூடாது.

இறையன்பு (பிரேமை) என்னும் வார்த்தையை நாம் அடிக்கடி கேட்கிறோம். இந்த இறையன்பினை எந்த அளவிற்கு உண்மையில் வளர்த்துக்கொள்ள முடியும் என்பதை நாம் வைஷ்ணவ தத்துவத்திலிருந்து கற்றுக்கொள்ளலாம். அது குறித்த ஏட்டுக்கல்வியை பல்வேறு சாஸ்திரங்களிலும் காணலாம், ஆனால், அது உண்மையில் என்ன என்றும், அதனை எவ்வாறு வளர்த்துக்கொள்ள முடியும் என்பதையும் வைஷ்ணவ சாஸ்திரங்களில் காண முடியும். சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறையன்பு தன்னிகரற்றது, வளர்ச்சி பெற்றது.

ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒவ்வொரு மத நூலிலும் இறையன்பைப் பற்றிய சிறு குறிப்பு இருப்பதாக சைதன்ய மஹாபிரபு நமக்குத் தெரிவிக்கிறார். ஆனால் இறையன்பு என்றால் உண்மையில் என்ன என்பதை எவரும் அறிவதில்லை. வெளியில் அவர்கள் இறையன்பை பற்றி பிரச்சாரம் செய்தாலும், அதை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்த எந்த எண்ணமும் அவர்களிடம் இல்லை. ஆனால் சைதன்ய மஹாபிரபுவோ காதலன், காதலி என்ற உறவுமுறையுடன் இறைவனிடம் அன்பு செலுத்துவது எவ்வாறு என்பதற்கு செய்முறை விளக்கமளித்துள்ளார்.





# விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்